பத்திரிகைச் செய்தி வெளியீடு

கொழும்பு, 23 யூலை 2013,

**லங்கா கிளியர் புதிதாக அறிமுகப்படுத்தி வைக்கும் லங்காபே பொது தன்னியக்க சொல்லி இயந்திர நிலை மாற்றி**

தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பை வழங்கும் லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிட்டட், 2013 யூலை 23ல் பத்தரமுல்லையிலுள்ள வார்டர்ஸ் எட்ஜில், நடைபெற்ற கோலாகலமான புதிதாக அறிமுகப்படுத்தி வைக்கும் வைபவத்தில் "லங்காபே" என்ற வர்த்தகச் சின்னத்தின் கீழ் பொது தன்னியக்க சொல்லி இயந்திர நிலை மாற்றியை (CAS) அறிமுகப்படுத்தியது. நிலைமாற்றியின் முதல் கொடுக்கல் வாங்கல்களை திரு.அஜித் கப்ரால், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திரு.ஆனந்த சில்வா, இலங்கை மத்திய வங்கீ பிரதி ஆளுநர் ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்ட இடத்தில் முறையே இலங்கை வங்கியினதும், மக்கள் வங்கியினதும் இரண்டு தன்னியக்க சொல்லி இயந்திரங்களில் நடாத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் லங்கா கிளியரினால் நடைமுறைப்படுத்தப்படும் பொது அட்டை மற்றும் கொடுப்பனவு நிலைமாற்றி (CCASPS) லங்காபே CAS ன் முதற் கட்டமாக இருப்பதுடன் நாட்டின் தன்னியக்க சொல்லி இயந்திர கொடுக்கல் வாங்கல்களில் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லங்கா கிளியர் தலைவர் திருமதி. பிரியந்தா லியனகே தனது உரையில் கூறினார் "இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்கு விரைவாக காசோலை விடுவிப்பதிலிருந்து, பாதுகாப்பான வினைத்திறன் மிக்க கொடுப்பனவு உட்கட்டமைப்பில் நாம் முன்னோடியாகவுள்ளோம். நாங்கள் செய்யும் எல்லா வேலைகளிலும் அதி உச்ச திறமையில் பொது மக்களுக்கும் பாத்தியதையுடையோருக்கும் சேவை செய்வதை இறுதி நோக்கமாகக் கொண்டே செயல்படுகிறோம். இன்று நாங்கள் அதற்கு மேல் சென்றுவிட்டோம். பொதுமக்களிடம் பணத்தை மீளப்பெறுவதற்கு எவ்வளவு தூரம் அவர்கள் செல்வார்கள் எனக் கேட்டால், ஒவ்வொருவரும் வித்தியாசமான கதையைச் சொல்வார்கள். எங்களிடம் ஒன்றுள்ளது. அது ஒன்று ஆகக்கூடிய திறமையில் சௌகரியத்துடனும் பாதுகாப்புடனானதும் மற்றும் நிதிப்பலத்தைக் கொண்டதுமாகும். போருக்குப் பின்னரான அபிவிருத்தியில், எமது தாய்நாடு மீண்டும் ஒரு முறை நாளைய நாள் நன்றாகவிருக்க ஒன்று சேர்கிறது. அண்மித்த கடந்த காலத்தில் இலங்கை தனது பெருமையையும் ஒன்றுமையையும் பல சந்தர்ப்பங்களிலும் பல வழிகளிலும் வெளிக்காட்டியது. லங்கா கிளியர் இந்த உணர்வை உள்ளடக்கி கலாச்சாரம், தொழில்நுட்பம் ஆகியவற்றை குவியமாக்கி நாம் இன்று உங்களுக்குத் தருவதாகும்".

பொது அட்டை மற்றும் கொடுப்பனவு நிலைமாற்றி (CCAPS) என்பது பொது தன்னியக்க சொல்லி இயந்திர நிலைமாற்றி (CAS) பொது POS நிலைமாற்றி (CPS) பொது இலத்திரனியல் நிதி மாற்றல் நிலைமாற்றி (CEFTS) மற்றும் பொது மொபைல் நிலை மாற்றி (CMObs) போன்ற பல்வகை உள்நாட்டு கொடுப்பனவு வலையமைப்புகளின் ஒரு நிலைப்படுத்தப்பட்ட முறைமையாகும் அத்துடன் லங்காபே CAS நேரடியாக இலங்கை வங்கியுடனும், மக்கள் வங்கியுடனும் இணைப்பை ஏற்படுத்தி லங்காபே CAS ன் முதலாவது உறுப்பினர்கள் ஆனது. பல நிதி நிறுவனங்கள் லங்காபே உடனான பொது நிலைமாற்றியுடன் இணைய பரிசோதித்து சான்றுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. மேலும் எதிர்வரும் மாதங்களில் நிலைமாற்றியுடன் எல்லா வங்கிகளும் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் இது நாட்டிலுள்ள ஒரு பிரமாண்டமான தன்னியக்க சொல்லி இயந்திரத்தைக் கொண்ட தனியொரு வலையமைப்பாகி தன்னியக்க சொல்லி இயந்திரப் பாவனையாளருக்கு ஏராளமான நன்மைகளைக் கொடுக்கும்.

இன்றைக்கு லங்காபே - CAS - 900ற்கு மேற்பட்ட தன்னியக்க சொல்லி இயந்திரங்களைக் கொண்ட இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் தன்னியக்க சொல்லி இயந்திரங்களை இணைத்துள்ளது. இது கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் ஏனைய வங்கிகளின் தன்னியக்க சொல்லி இயந்திரத்தின் மூலம் தமது கொடுக்கல் வாங்கல்களை ஆகக்குறைந்த செலவில் நடாத்த வழி வகுக்கிறது. லங்காபே CAS நிலைமாற்றியுடன் இணையும் ஒவ்வொரு வங்கியின் வாடிக்கையாளரும் தமது தன்னியக்கக் கொடுக்கல் வாங்கல்களை குறைந்த

செலவில் எந்த ஏனைய வங்கிகளின் தன்னியக்க சொல்லி இயந்திரங்களைப் பாவித்து மேற்கொள்ள முடியும்.

புதிதாக அறிமுகப்படுத்திய வைபவத்தில் உரையாற்றிய இலங்கை வங்கியின் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி திரு.ராசிக் சறூக் "இந்த செயற்றிட்டம் வாடிக்கையாளர்களுக்கு பரந்த நன்மைகளைக் கொண்டு வந்து நாடு பூராவுமுள்ள பொது தன்னியக்க சொல்லி இயந்திரங்களில் தங்களது கொடுக்கல் வாங்கல்களை நியாயமான கட்டணத்தில் சௌகரியமாக நடாத்த இடமளிக்கிறது என்றார். அத்துடன் இலங்கையில் முதலிடத்தில் இருக்கும் இலங்கை வங்கியே இந்த செயற்றிட்டம் வெற்றி பெற உந்துசக்தியாக விளங்கியது என்றார்." அத்துடன் மக்கள் வங்கியின் தலைவர் திரு.காமினி செனரத் அங்கு கூடியிருந்தவர்களிடையே உரையாற்றியபோது ''இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவுப் பேரவையின் வழிகாட்டல்களின் கீழ் ''தேசிய தன்னியக்க சொல்லி இயந்திர நிலைமாற்றி''யை இன்று புதிதாக அறிமுகப்படுத்தி வைக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் கூட்டு உரித்துடைய தேசிய தீர்வகம் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் பங்காளியாவதையிட்டு மிகவும் மகிழ்ச்சிடைகிறேன்.

பெறுமதி மிக்க எங்கள் எல்லா வாடிக்கையாளர்களுக்கும் அதி சிறந்த நன்மைகளை வழங்குவதோடு நாட்டிலுள்ள எல்லா எதிர்கால இலத்திரனியல் கொடுப்பனவுகளுக்கும் இந்த செயற்றிட்டம் முதுகெலும்பாக உட்கட்டமைப்பின் உருவாக்கத்திற்கு வழிவகுப்பதுடன் எதிர்கால நிதிசேவைகளை ஒரு நிலைப்படுத்தி விரைவான கொடுப்பனவுகள் மூலம் துரித பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் என நம்புகிறேன்.

CCAPS இது மத்திய வங்கியின் கீழ்ப்பார்வையில் ஏனைய வங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு தேசிய முயற்சி. இது சிறந்த சர்வதேச நடைமுறைகளைச் சேர்ப்பதால் பிரமாண்டமான வசதிகளைக் கொண்டுவரும். மேலும் அது பாதுகாப்பு மற்றும் இலங்கையில் சில்லறை இலத்திரனியல் கொடுப்பனவுகளில் செலவு செயல் திறனைக் கொண்டு வருவதோடு மேலும் முக்கியமாக பங்கு பெறும் வங்கிகள் வாடிக்கையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புதிதாக கொடுப்பனவு உற்பத்திகளைத் தொடங்கி வைப்பதற்கும் வழிவகுக்கும். முழுமையான CCAPS செயல்படுத்தல் என்பது ஒரு ''விளையாட்டு மாற்றி'' (Game Changer). அது நாட்டில் உள்ள பங்குபற்றும் எல்லா நிதி நிறுவனங்களுக்கும் அத்துடன் அதன் விளையாக பொது மக்களுக்கு கூடிய வினைத் திறன் மிக்க செலவுத் திறனுடைய இலத்திரனியல் கொடுப்னவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும்.

## லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிட்டட் பற்றி

லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிட்டட் நாட்டில் உள்ள மிகவும் வெற்றிகரமான பொது – தனியார் கூட்டு நிறுவனங்களில் ஒன்றாகும். 2002ம் ஆண்டிலிருந்து இலங்கை தன்னியக்க விடுவிக்கும் மையம் (SLACH) உரித்து நீக்கத்தைத் தொடர்ந்து நிறுவனம் தொடர்ச்சியாக வங்கிக் கைத்தொழிலில் பொருளாதார அளவைக் கொண்டு வந்தது. இது தனியார் துறையின் செயல்திறன் இயற்கை ஆற்றல் பொதுத் துறைக்கேயான ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பைச் சேர்த்து வைத்தது.

பொருள் முதலீட்டுப் பட்டியல் மையத்தைச் சுற்றாகக் கொண்ட வங்கிக் கைத்தொழிலுக்கான சேவைகள், லங்கா கிளியர் வழங்குபவை, செயல் திறன்மிக்க கொடுப்பனவுகளை மேற்கொள்ள உதவியளிக்கும் ஒரு பல்வகையான சேவைகளை நிர்வாகம் செய்தல். இவை உள்ளடக்குபவை, காசோலை பிம்பப்படுத்தல் துணித்தல் முறைமை (CTTS) அது காசோலை எங்கு வைப்பலிடப்பட்டாலும் அதைக் கருதாது அடுத்த நாளே காசோலையை மாற்றுவதற்கும் அத்துடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS). இது ஒரு வங்கிகளுக்கிடையிலான தன்னியக்க நிதி மாற்றல் முறைமையை தொடரறா (ONLINE) அதே நாளில் உயர் பாதுகாப்பான சூழலில் நிதி மாற்றல் செய்வது அமெரிக்க டொலர் விடுவிக்கும் முறைமை அறிமுகப்படுத்தியது. குறிப்பிடத்தக்கவாறு அமெரிக்க டொலர் காசோலைகள் மற்றும் உண்டியல்களை மாற்றுவதில் வாடிக்கையாளருக்கு தெளிவாகத் தெரியக் கூடிய நன்மையைக்

கொண்டு வந்ததுடன் அதேவேளையில் வங்கிச் செயல் திறனில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியது.

இதற்கு மேலாக நிறுவனம் மிக உயர்ந்த தேவையான ஆகக் கூடிய தொடரறா (ONLINE) கொடுக்கல் வாங்கல்களுக்கான பாதுகாப்பில் கவனம் செலுத்தியது. இது நிதித்துறையில் இலக்க பாதுகாப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் பொறுப்பையேற்று ஒரு அத்தாட்சிப்படுத்தும் அதிகாரத்தை இணைப்பதன் மூலம் சாத்தியமானது.

அப்படியான சேவைகள் மூலம் லங்கா கிளியர் தொடர்ந்தும் தனது பொறுப்பாணையைப் பிரயோகிப்பதுடன் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பில் முன்னணி வகித்து தனது நிலையை பலப்படுத்தியுள்ளது. இது வங்கிக் கைத்தொழில் மற்றும் பொது மக்களுக்கும் ஒரே மாதிரியாக, மூலோபாய முதலீடுகளிலான நன்மைகளை மாற்றுவதாலும், நவீனமயப்படுத்துவதாலும் சாத்தியமாகியது.

மேலதிக தகவல்களுக்கும் விளக்கங்களுக்குத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:

திரு.ஹர்ஷா வணிகதுங்கா
பிரதிப் பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயலாக்கல்
லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிட்டட்
லெவல்:18 இலங்கை வங்கி தலைமை அலுவலகம்
இலங்கை வங்கி சதுக்கம்
இலங்கை வங்கி மாவத்தை
கொழும்பு – 01
தொலைபேசி இல: 011-2356960 (நேரடி)
077-7263150 (மொபைல்)
தொலைநகல்: 011-2544346